தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 10786/விசாரணை/E/2022 (W.P.(MD) No.2255/2025)</u>**

திரு.M.ஜெயமணி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**<u>ஆணை</u>**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை W.P.(MD)No.2255 of 2025 என்ற வழக்கின் மீது 28.01.2025 அன்று பிறப்பித்துள்ள உத்தரவினையடுத்து, இவ்வாணையத்தால் 18.06.2025 அன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அன்றைய தின விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு.M.ஜெயமணி ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலர்கள் நேரில் ஆஜரானார்கள்.

2. அன்றைய தின விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர்கள் எடுத்துரைத்த வாதங்கள் மற்றும் சமர்ப்பித்த அறிக்கைகள் மற்றும் மேல்முறையீட்டாளரின் சட்டப்பிரிவு 6(1) மற்றும் 19(3) மனுக்கள் உள்ளிட்ட ஆணையத்தின் ஆவணங்களை பரிசீலனை செய்த பின்பாக, 18.06.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கிணங்க, அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்கள் மற்றும் சிவகாசி சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஆகியோர் 03.07.2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜரானார்கள். மேலும், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரின் 02.07.2025 தேதியிட்ட ஒருங்கிணைந்த அறிக்கை 03.07.2025 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

3. விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரின் 02.07.2025 தேதியிட்ட அறிக்கையினை பெற்ற பின்பாக, மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்திற்கு 08.07.2025 தேதியிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில், தான் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும்,

அவ்வழக்கின் மீது 18.07.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், அவ்வழக்கிற்கு பின்பாக மேல்முறையீட்டு அலுவலரின் 02.07.2025 தேதியிட்ட கடிதம் குறித்த தனது கருத்தினை தெரிவித்திட காலஅவகாசம் வழங்குமாறு கோரியதன் அடிப்படையில், இவ்வாணையத்தால் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது :-

*5. ஆகவே, மேல்முறையீட்டாளர் கோரியவாறு 18.07.2025-க்கு பின்பாக, விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரின் 02.07.2025 தேதியிட்ட அறிக்கை குறித்து ஏதும் தெரிவிக்க விரும்பினால் அதனை 04.08.2025-க்குள் பதிவஞ்சலில் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு இவ்வாணையம் மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடுகிறது.*

*6. இவ்வழக்கில் 04.08.2025-க்கு பின்பாக உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.*

4. மேற்குறித்த உத்தரவின்படி, மேல்முறையீட்டாளரிடமிருந்து 04.08.2025 வரை எவ்விதமான கடிதமும் கிடைக்கப் பெறவில்லை. இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் 02.07.2025 தேதியிட்ட அறிக்கையில்,

*"தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம், 1961 திருத்தச் சட்டம் 17/1970-ன்படி 15.02.1970 அன்று நடைமுறைக்கு வந்து தற்போது வரை நடைமுறையில் உள்ளது. அதன்படி 02.10.1970 அன்று மற்றும் அதற்கு பின்னர் நில உச்சவரம்பை காட்டிலும் மிகையாக நிலம் வாங்கப்படும்போது மேற்படி திருத்தச் சட்டத்தை பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.*

*விருதுநகர் மாவட்டத்தில், மேற்படி சட்டத்தின்படி உபரி நிலங்களாக அறிவிப்பு செய்யப்படும் நடவடிக்கைகள் திருநெல்வேலி உதவி ஆணையர் அலுவலகத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு வரை செயல்பட்டு வந்தது.*

*அரசாணை நிலை எண்.34 வருவாய் துறை [L.R.I(2)] நாள் 14.01.2015-ன்படி மாவட்ட அளவில் நிலச்சீர்திருத்த பிரிவு உருவாக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் செயல்படடு வருகின்றது. மேற்படி அரசாணையில் "தமிழ்நாடு நில சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை அகற்றுதல்) விதிகள், 1965-ன் கீழ் வழங்கப்பட்ட ஒதுக்கீடு/ரத்து உத்தரவுகளை பிறப்பிக்க சட்டப்பூர்வ விசாரணையை நடத்துவதற்கு, மாநிலத்தில் உள்ள அனைத்து வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் அதிகாரியின் அதிகாரங்களை வழங்குதல், இது பிப்ரவரி 1, 2015 முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தப்பட்டது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் மேற்படி அரசாணை ஏற்படுத்திய பிறகு திருநெல்வேலி நிலச்சீர்திருத்த உதவி ஆணையர் அலுவலகத்தில், விருதுநகர் மாவட்டத்திற்கு தொடர்புடைய MR.I, MR.IV பதிவேடுகள் மற்றும் தொடர்புடைய கோப்புகள் விருதுநகர் மாவட்ட நிலச்சீர்திருத்த பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பின்னர், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசி மற்றும் அருப்புக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கு மேற்படி MR.I, MR.IV உபரி பதிவேடுகளும் மற்றும் தொடர்புடைய கோப்புகள் முறையே 07.03.2015 மற்றம் 18.03.2025 அன்றைய தேதிகளில் பிரித்து ஒப்படைக்கப்பட்டது.*

*தமிழ்நாடு நிலச்சீர்த்திருத்தம் சட்டத்தின்படி நில உச்சவரம்பிற்கு மிகையாக விவசாய கைப்பற்றில் வைத்துள்ள தனிநபர், குடும்பம், சொசைட்டி மற்றும் நிறுவனத்தின் நிலங்களை உபரி நிலங்களாக அறிவிப்பு செய்யப்பட்ட விவரங்கள் MR.I பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது."*

*"மேலும் அரசாணை நிலை எண்.34, வருவாய்துறை, [LR.I(2)] நாள் 14.01.2015-ன்படி முன்னர் திருநெல்வேலி உதவி ஆணையர் (நிலச்சீர்திருத்தம்) அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பதிவேடுகள் மற்றும் கோப்புகள் இவ்வலுவலகத்தில்*

*பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற விவரமும், அவற்றில் இருந்து ஏதேனும் தகவல்கள் கோரும் பட்சத்தில் மேல்முறையீட்டாளருக்கு வழங்க தயாராக உள்ளோம் என்ற விவரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."*

என்று தெரிவித்துள்ளார்.

6. மேல்முறையீட்டாளர் தனது 09.02.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில், கீழ்க்கண்ட இரு இனங்களில் தகவலை வழங்கக் கோரியுள்ளார்.

1. ***Details of Persons, Family and Companies, if any, who hold agricultural land in Virudhunagar District beyond ceiling limit as per current Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling of Land)***
2. ***As per Land Reform Act, what is time period within which Industry/Companies have to set up their Industry/Company after acquiring agricultural land for the purpose and details of Industry/Companies, if any, who have not complied the time period for the agricultural land acquired in Virudhunagar District.***

7. மேல்முறையீட்டாளர் இவ்வழக்கின் மீதான விசாரணைக்கு முன்பாக அருப்புக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலகத்தில் 12.05.2022 அன்று ஆவணங்களை பார்வையிட்டுள்ளார். இவ்வாணையத்தால் 18.06.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு பின்பாக, ஆணையத்தின் உத்தரவின்படி, பொது அதிகார அமைப்பினரால் ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டும், அவர் ஆவணங்களை பார்வையிடவில்லை.

8. ஆகவே இவ்வாணையத்தால் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன :-

1. **இவ்வாணை கிடைக்கப் பெற்றவுடன், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள்,**

(அ) அரசாணை நிலை எண்.34, வருவாய்த் துறை (LR.I(2)) நாள் 14.01.2025-ன் நகல்

(ஆ) அரசு/வருவாய் நிர்வாக ஆணையர்/நில நிர்வாக ஆணையர்/நிலச்சீர்திருத்த ஆணையர்/மாவட்ட நிர்வாகம் ஆகியோரால் 2015-க்கு பின்பாக மேற்படி பதிவேடுகள் பராமரிப்பது குறித்து வெளியிடப்பட்ட அரசாணை/சுற்றறிக்கைகள் இருப்பின், அதன் நகல் மற்றும்

(இ) மேல்முறையீட்டாளர் 07.02.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் 2 இனங்களில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக,

(i) திருநெல்வேலி உதவி ஆணையர்(நிலச்சீர்திருத்தம்) அவர்களால் 14.01.2015 வரை பராமரிக்கப்பட்ட விபரம் மற்றும்

(ii) அதனைத் தொடர்ந்து 14.01.2025 முதல் 09.02.2022 வரை (மேல்முறையீட்டாளரின் சட்டப்பிரிவு 6(1) மனு நாள்) மேற்படி பதிவேடுகளில் மாவட்ட நிர்வாகத்தால் பதிவு செய்யப்பட்டுள்ள விபரங்களை **தங்கள் அலுவலகத்திலிருந்தும் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து** பெற்றும்,

*மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில்* ***விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்*** *அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக*

***இவ்வாணையத்தில் 12.08.2025 அன்று சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு*** *இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. **இவ்வழக்கானது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையின் 28.01.2025 தேதியிட்ட உத்தரவின்படி மேற்கொள்ளப்பட்டு, இறுதி ஆணை பிறப்பிக்க வேண்டியுள்ளதால், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி, இவ்வாணையத்தின் உத்தரவினை நிறைவேற்றுவது அவரின் தனிப்பட்ட பொறுப்பாகும் என்பதை ஆணையம் பதிவு செய்து, மேற்குறித்த பத்தி 8-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை நிறைவேற்றி, 12.08.2025 அன்று தவறாமல் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

3. மேல்முறையீட்டாளர், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து தகவல் பெறப்பட்ட பின்பாக, அது குறித்து ஏதும் தெரிவிக்க விரும்பினால், அதனை எழுத்துபூர்வமாக 19.08.2025-க்குள் இவ்வாணையத்திற்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

4. இவ்வழக்கின் மீது 19.08.2025-க்கு பின்பாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 10786/விசாரணை/E/2022 (W.P.(MD) No.2255/2025)**

பெறுநர்
**மேல்முறையீட்டு அலுவலர்/**
**மாவட்ட வருவாய் அலுவலர்,**
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

**வருவாய் கோட்டாட்சியர்,**
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
**சாத்தூர்,** விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சாத்தூர், விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சிவகாசி, விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35. **(W.P.(MD) No.2255/2025 - தொடர்பாக)**

திரு.M.ஜெயமணி
3/26-1 தெற்கு தெரு, வலையபட்டி,
வெம்பக்கோட்டை வட்டம்,
விருதுநகர் மாவட்டம்-626 127. **(BY RPAD)**

Copy to: File

RJ/PS 5.8